THIRU K. KANDASWAMY : On a point of order, Sir. Just with a view to avoid interruption, I waited. Now with your kind permission, I want to raise a point of order with regard to the speech made by Thiru K.T.K. Thangamani.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் பேசும்போது கொள்கையற்ற கொள்கையை உடைய ஒரு அரசு என்றும், ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம் என்றும் குறிப்பிட்டார்கள். அவர்கள் கட்சிக் கோட்பாட்டின்படி அவர்கள் ஆண்டவன் மீது நம்பிக்கையில்லாதவர்கள். இன்று அவர்களுக்கு ஆண்டவன் மீது நம்பிக்கையுண்டா என்பதற்கான விளக்கத்தைச் சொல்வார்களா?

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) விவாதத்திற்கு கட்சி வாரியாக ஒதுக்கப்பட்டுள்ள நேரம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது தீர்மானங்களை முன்மொழிந்து பேசிவிட்டார்கள். இனி விவாதம் தொடங்க இருக்கிறது. இன்று 1½ மணி நேரம் இருக்கிறது. 8, 9 10 தேதிகளில் எல்லாம் சேர்ந்து 15 மணி நேரம் இருக்கிறது. 10-ம் தேதி மாலை விடையளிக்க ஒதுக்கி வைத்தால் 15 மணி நேரம் இருக்கிறது. இதைக் கட்சிகளிடையே பங்கிட்டால் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு 7 மணி நேரம், காங்கிரஸ் (ஓ) 1 மணி 44 நிமிடங்கள், ஏ.டி.எம்.கே. 1.36 நிமிடங்கள், பார்வேர்ட் ப்ளாக் 56 நிமிடங்கள், முஸ்லிம் லீக் 48 நிமிடங்கள், காங்கிரஸ் 48 நிமிடங்கள், ஸி.பி.ஐ. 40 நிமிடங்கள், சுதந்திரா 40 நிமிடங்கள், டி.ஸி.பி. 24 நிமிடங்கள், டி.ஏ.கே. 8 நிமிடங்கள், இன்டிப் பென்டன்ட்ஸ் 8 நிமிடங்கள், நாமினேட்டட் மெம்பர் 8 நிமிடங்கள் என்று வருகிறது. இந்த நேரத்தை அந்தந்த கட்சித் தலைவர்கள் மனதில் கொண்டு அந்தந்த நேரத்திற்குள்ளே உறுப்பினர்கள் பேசுவதற்கு அறிவுரை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இதற்கு மேல் நேரம் வழங்க முடியாத நிலையில் இருக்கிறேன் என்றும் சொல்லிக்கொள்கிறேன்.